செய்தி வெளியீடு எண்:622 நாள்:17.08.2021

<u>செய்தி வெளியீடு</u>

**<u>தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகள்/வர்த்தகர்கள்/மின்கலன் மொத்த விற்பனையாளர்கள் ஆகியவர்களுக்கு வாரியம் வழங்கும் இணையவழிச் சேவைகள் பற்றிய செய்தி அறிக்கை</u>**

தமிழ்நாடு மாசுத் கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்காக ஜனவரி 2015 முதல் கீழ்கண்ட இணையவழி சேவைகளைச் வாரியத்தின் பிரதான இணையவழிச் சேவையான இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (OCMMS) மூலம் வழங்கி வருகிறது.

1. தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான இசைவாணை (CTE), இயக்குவதற்கான இசைவாணை (CTO), இசைவாணை மற்றும் புதுப்பித்தல் (RCO).
2. தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை விதிகள், மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள் ஆகியவற்றின் கீழ் தொழிற்காலைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அங்கீகாரம் வழங்குதல் மற்றும் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் தொழிற்சாலைகளைப் பதிவுசெய்தல்.
3. தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை விதிகள், மருத்துவ கழிவு மேலாண்மை விதிகள், மின்னணுக் கழிவு மேலாண்மை விதிகள், பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்கீழ் தங்களது ஆண்டறிக்கையைத் தொழிற்சாலைகள் / மருத்துவமனைகள் பதிவேற்றம் செய்தல்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தனது இணையவழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பு (OCMMS) இணையதளத்தில் தொழிற்சாலைகள், உள்ளாட்சி அமைப்புகள், தீங்கு விளைவிக்கும் கழிவுகளை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள், காரீய அமில மின்கலன் (Lead Acid Battery)

நுகர்வோர் மற்றும் காரீய அமில மின்கலன் மொத்த வியாபாரிகள் ஆகியோருக்கான **கீழ்க்கண்ட இணையவழிச் சேவைகள் ஆகஸ்ட் 9, 2021 முதல் ocmms.tn.gov.in எனும் இணையதளத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது**.

1. **திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ் அங்கீகாரம் வழங்குதல்**:
   உள்ளாட்சி அமைப்புகள் / உள்ளாட்சி அமைப்புகளால் அங்கீகரிக்கப்பட்ட முகமைகள் / திடக்கழிவு மேலாண்மை அமைப்புகளை இயக்குபவர்கள் / இந்த விதிகளின் விதி எண் 15(y)–ன் கீழ் அங்கீகாரம் பெற இந்த இணையவழிச் சேவையை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்.
2. **கட்டுமான மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ் அங்கீகாரம் வழங்குதல்**:
   மேற்குறிப்பிட்ட விதிகளின் விதி எண் 7 (1)–ல் குறிப்பிட்டுள்ளவாறு இத்தகைய கழிவுகள் மேலாண்மை அமைப்பினை இயக்குபவர்கள் இந்த விதிகளின் படிவம் 1–ல் அங்கீகாரம் பெற இந்த இணையவழிச் சேவையைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம் மற்றும் தங்களது ஆண்டறிக்கையை பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.
3. **தீங்கு விளைவிக்கும் கழிவு மேலாண்மை விதிகளின் கீழ் வர்த்தகர்களுக்கான ஒரு முறை அங்கீகாரம் வழங்குதல்**:
   தீங்கு விளைவிக்கும் மற்றும் மற்ற கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்த இயக்கம்) விதிகள் 2016–ன் கீழ் ஷெட்யூல் III–ன் பகுதி D–ல் குறிப்பிட்டுள்ள தீங்கு விளைவிக்கும் கழிவுகளை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் இவ்விதிகளின் கீழ் ஒரே முறை அங்கீகாரம் பெற இந்த இணையவழிச் சேவையைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்.
4. **காரீய அமில மின்கலன் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2001–ன் கீழ் காரீய அமில மின்கலன் மொத்த வியாபாரிகளைப் பதிவுசெய்தல்**:

இவ்விதிகளின்கீழ் குறிப்பிட்டுள்ள மொத்த வியாபாரிகள் பதிவுசெய்து கொள்வதற்காக இந்த இணையவழிச் சேவையைப் பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம்.

5. **காரீய அமில மின்கலன் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2001–ன் கீழ் ஆண்டறிக்கைகளைப் பதிவேற்றம் செய்தல்**:
   காரீய அமில மின்கலன் தயாரிப்பவர்கள் / மொத்த நுகர்வோர்கள் / இறக்குமதியாளர்கள் / மறுசுழற்சி செய்பவர்கள் / ஏலம் விடுபவர்கள் ஆகியோர் இந்த இணையவழிச் சேவையைப் பயன்படுத்தித் தங்களது ஆண்டறிக்கையைப் பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்ட இந்தச் சேவைகளைத் தொழிற்சாலைகள் 16.08.2021 முதல் பயன்படுத்தலாம்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9